பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**21 04 2026 6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

2. தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்வதற்கு திமுக கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அஇஅதிமுக வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

4. மக்களுக்கு தரமான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் தெரிவித்துள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 99 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

இதனையடுத்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நாளை மறுநாள் நடைபெற உள்ள வாக்குப் பதிவிற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக வாக்குச்சாவடிகள்தோறும் நுண் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நுண் பார்வையாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த சட்டப்பேரவைத் தேர்தல் பணியில் **136** பொது பார்வையாளர்களும், **40** காவல் பார்வையாளர்களும், **150** செலவின பார்வையாளர்களும் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மத்திய ஆயுதப்படையின் **300** கம்பெனிகள் பாதுகாப்புப் பணியினை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்குப்பதிவு தினமான வரும் **23-**ஆம் தேதியன்று ஊதியத்துடன் கூடிய பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியலில் **5** கோடியே **73** லட்சத்து **43** ஆயிரத்து **291** வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதில் **2** கோடியே **80** லட்சத்து **30** ஆயிரத்து **658** ஆண் வாக்காளர்களும், **2** கோடியே **93** லட்சத்து **4** ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐந்து பெண் வாக்காளர்களும் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

**7** ஆயிரத்து **728** மூன்றாம் பாலினத்தவரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மாநிலம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுவதன் மூலம் தமிழ்நாடு விரைவாக வளர்ச்சியடையும் என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான திரு. சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மத்திய-மாநில அரசுகள் இணைந்து செயல்படுவது மாநிலத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் பயனளிக்கும் என்று திரு. சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் தொடர வேண்டும் என்றால், மீண்டும் திமுக ஆட்சிப் பொறுப்புக்கு வர வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் திரு.வி.க. நகர், பெரம்பூர் உள்ளிட்ட 6 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு மத்திய அரசு போதிய நிதியை வழங்குவதில்லை என்று குற்றம் சாட்டினார்.

அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு திமுக கூட்டணி தேர்தலில் வெற்றி பெற மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

அஇஅதிமுக வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் எடப்பாடியில் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுமரிமை அளித்து நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

விவசாய தொழிலாளர்கள் பயனடையும் வகையில் கால்நடைப் பூங்கா முழுமையாக செயல்படுத்தப்படுவது உள்ளிட்ட அனைத்து

தரப்பு மக்களின் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று

திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<>>>>

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவாக உள்ள சிறுபான்மையின வாக்குகளை பிரிப்பதற்காகவே தமிழக வெற்றிக் கழகம் செயல்பட்டு வருவதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தேமுதிக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் திமுக தலைமையிலான கூட்டணியில் இணைந்திருப்பது அக்கூட்டணிக்கு மேலும் வலு சேர்ப்பதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் பிஜேபி ஆதிக்கம் செலுத்தும் என்பதை அக்கட்சித் தொண்டர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று திரு. தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில் மின் கட்டணம், வீட்டுவரி, தொழில்வரி, அத்தியாவசிய பொருட்கள் போன்றவற்றின் விலைவாசி அதிகரித்துள்ளதாக தமாகா தலைவர் திரு. ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தமிழகத்தில் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, போதைப்பொருள் புழக்கம் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசுடன் இணக்கமாக செயல்பட வேண்டியது அவசியம் என்றும், தமிழகத்தை வளமான மாநிலமாக மாற்றுவதற்கு அஇஅதிமுக தலைமையிலான கூட்டணிக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று திரு. ஜி.கே. வாசன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மக்களுக்கு தரமான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் தெரிவித்துள்ளார்.

காரைக்குடியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தமது கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் தரமான கல்வி மற்றும் சுகாதார வசதிகள் அனைவருக்கும் கட்டணமின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாம் தமிழர் கட்சிக்கு மக்கள் வாய்ப்பளிக்க வேண்டும் என்று திரு. சீமான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தை திறம்பட நிர்வகிப்பதற்கு தவெக தலைவர் திரு. விஜய் தலைமையிலான அரசு அமைவதே அவசியம் என்று அக்கட்சியின் நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் அக்கட்சிக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், திமுக மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் சட்டம்-ஒழுங்கு நிலை மேலும் மோசமடையும் என்று கூறினார்.

திமுகவை தோற்கடிக்க தவெக-வால் மட்டுமே முடியும் என்று திரு. செங்கோட்டையன் தெரிவித்தார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட வனப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக **350** ஏக்கருக்கும் அதிகமான பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

காட்டுத் தீயை அணைப்பதற்கான பணிகளில் **200** பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Saravanan — 45 Sec)**

<<<<>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று, மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோரப்பகுதிகளில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

கோடை வெயிலின் தாக்கம் சற்று அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

இஸ்ரேல் - லெபனான் இடையேயான இரண்டாவது சுற்று அமைதிப் பேச்சுவார்த்தைகள், நாளை மறுநாள் வாஷிங்டனில் நடைபெறும் என்று இஸ்ரேல் உறுதி செய்துள்ளது.

------------

இந்தியா - பிரிட்டன் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்துவதற்காக முப்படைத் தளபதி திரு. அனில் சௌஹான் 3 நாள் பயணமாக பிரிட்டன் செல்கிறார்.

------------

விரைவு ரயில்களில் தனித்துவ அடையாள அட்டை வைத்திருக்கும் மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள முன்பதிவில்லா பெட்டிகளில் பயணிக்கலாம் என்று ரயில்வே தெளிவுபடுத்தியுள்ளது.

------------

ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து திருப்பதி மாவட்ட வருவாய் அதிகாரி திரு. நரசிம்மலு நேற்று ஆய்வு செய்தார்.

------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பதற்றமான வாக்குச்சாவடிகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள நுண் பார்வையாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் ஒயிலாட்ட கலைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை பணியாளர்கள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

------------

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த சங்கர நாராயண சுவாமி திருக்கோவிலில் சித்திரைத் திருவிழா வெகு விமரிசையாக தொடங்கியது.

------------

அட்சயதிருதியை முன்னிட்டு திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோவிலில் கருட சேவை நிகழ்ச்சி நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 99 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 199 றன் எடுத்தது.

இதனையடுத்து, 200 றன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய குஜராத் அணி 15 புள்ளி 5 ஓவரில் 100 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெறும் போட்டியில் ஹைராபாத் அணி, தில்லி அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாத்தில் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.

----------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பஞ்சாப் அணி 3-0 என்ற கோல் கணக்கில் காசி அணியை வென்றது.

**<<<<The End>>>>**